www.tamilarangam.net

# யாருக்கு உங்கள் வாக்கு

சமாதான பேச்சுவார்த்தை என்ற போர்வையில் ஒருவரை ஒருவர் பொறிக்குள் தள்ளும் உள்நோக்குடன் வெளியில் அரவணைப்பதாக பாசாங்கு செய்து நடத்திய நாடகம் தற்காலிகமாக யுத்தநிறுத்தத்தை மக்களுக்கு அளித்தது.

யுத்த நிறுத்தத்தை கொழும்பின் வியாபாரப்புள்ளிகளும் அரசியல்வாதிகளாக வேடம் புனைந்த ஊழல் பேர்வழிகளும் தமது பங்குக்கு நன்றாகவே பாவித்துள்ளனர். தனியார் துறை செல்வத்தை பெருக்கும் என்ற பொருளாதார சித்தாந்தத்தைச் சாட்டி, மக்களின் (அரசின்) பாரிய சொத்துக்கள் வியாபாரப்புள்ளிகளுக்கு விற்கப்படுகின்றன. சித்தாந்தம் காரணம் அல்ல, இந்தப் பேரத்தில் கிடைக்கும் பல கோடிக்கணக்கான லஞ்சமே (கொமிஷன்) காரணம். மந்திரிகள் பலரும், கடந்த இரண்டு வருடத்தில் நிரப்பக் கூடிய சாக்குகளெல்லாம் நிரப்பி விட்டனர். இந்த 'தனியார் மயமாதல்', நாட்டின் உயிர் நாடியான புகையிரதச் சேவையை தாரை வார்க்க யோசிக்கும் அளவுக்கு பூதாகரமாக வளர்ந்து விட்டது. (பாரிய முதலாளித்துவ நாடுகளில் கூட, நலன்புரி சேவைகள் அரசின் கைகளிலேயே உள்ளது.)

கூடவே இந்தப் அரசியல் வியாபாரிகள் புலிகள் கும்பலை சக வியாபாரிகளாக்கலாம், காலப்போக்கில் தலைக்கு மிஞ்சினால் மேற்குலகைப் பாவித்து கபளீகரம் பண்ணலாம் என்றும் கணக்குப் போட்டனர்.

ஆனால் புலிகள் கும்பலோ, சாவதானமாகத் தம் கணக்கைப் போட்டனர். அடுத்த போருக்கு ஆயத்தம் செய்வதோ இல்லையோ, கைகாவலாகத் தமிழ்ச் சிறுவர்களைப் பிடித்துப் பயிற்சியளித்து, 'கொள்கை' விளக்கம் தலைநிறைய ஊட்டி வளர்ப்பது, இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் 'தப்பி' நின்ற தமிழ்ச் ஜனங்களின் செல்வத்தையும் நிம்மதியையும் அபகரிப்பது, ஏ 9 பாதையை தங்கச் சுரங்கமாக்குவது, 'தமிழ் ஈழ தாயக' தாரக மந்திரத்தை இன்னும் தமிழர்களிடையே குசுகுசுத்து, மேற்குத் தூதர்களுக்கு ஹொங்ஹொங் பாணி, சுவிஸ் பாணி, பெல்ஜியப் பாணி என பாணிக்கதைகளை அளப்பது, ஆயுதங்களைக் கடத்துவது, தட்டிக் கேட்க முனையும் தமிழர்களைக் கொன்றொழிப்பது (மர்மச் சாவுகள்) போன்ற 'நற்காரியங்களை' யுத்த நிறுத்தப் போர்வையில் மிக எளிதாகச் செய்தனர்.

ஆனால் இந்த அரசியல் வங்குரோத்துக் கும்பல், தமிழரின் நல்வாழ்வும் பிரதேச உரிமைகளும் நோக்கமாக இருந்தால், யுத்தநிறுத்தத்தையும் பேச்சுவார்த்தையையும் உண்மையான பிரச்சினையை தீர்ப்பதற்குப் பாவித்திருக்க முடியும். குறைந்தபட்ச தீர்வை கடந்த காலத்தில் முன்வைத்த பொது ஜன முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி பேச்சுவார்த்தை மூலமாக தீர்வை முன்வைத்தால் எதிர்க்க முடியாத தர்மசங்கடமான நிலையிலேயே இருந்தது. ஆனால், இந்தப் புலிகள் கும்பலோ அரசியல்ரீதியாகப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இருந்த சாதகமான சூழலை பலமுனைகளிலும் பயன்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அரசியல் தீர்வை முன்வைக்க நெருக்குவதற்கு பதிலாக, தமது அதிகாரத்தை அனைத்து துறைகளிலும் நிலைநிறுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். தமிழ்ச் சமூகம் மூச்சுவிடுவதற்கான சிறிதளவு ஜனநாயக இடைவெளியையும் உருவாக விடாது, தமிழ் மக்களின் தலைவிதியை தனியொருவன் அபகரித்துக் கொள்ளவே புலிகள் கும்பல் முனைப்பாக இயங்கியது. தொடர்ச்சியான கொலைகளின் ஊடாக எச்சசொச்சமான அரசியல் பச்சோந்திகளையும் வெறும் தலையாட்டி பொம்மைகளாக மாற்றி இன்று உங்கள் முன் நிறுத்தி உங்களின் வருங்கால பிரதிநிதிகளாக தெரிவு செய்யுமாறு கேட்கிறார்கள்.

மறுபுறம் சிங்கள அரசியல் கட்சிகள் குறுகிய ஆட்சி அரசியலை மையப்படுத்தி தெற்கில் போட்டி அரசியலை முன்னெடுத்து அரசியல் தீர்வுக்கான சாதகமான சூழலைப் பாழாக்குகின்றனர். இவர்களின் அதிகாரப்போட்டி மீண்டும் இனவாத சக்திகளுக்குப் புத்துயிர் ஊட்டியுள்ளது. இந்த சீரழிந்த நிலைமை காரணமாக இனப்பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்க நெருக்கப்படாத, தயங்கிய, ஐக்கிய தேசிய கட்சி, தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் கணக்கிலெடுக்காது, முஸ்லிம்களின் பீதியை மனதில் கொள்ளாது, இடைக்கால நிர்வாகம் என்ற பேரில் தற்காலிக அதிகாரத்தைக் கும்பலுக்கு அளிப்பதன் மூலம் யுத்தத்தை தனது ஆட்சிக்காலம் வரையில் நிறுத்தி வைக்கலாமெனப் போட்ட நாடகத்தின் முதற்கட்டம் முடிவடைந்து இரண்டாவது அங்கம் மேடையேறுகிறது.

தலைவனதும் கும்பலினதும் நோக்கம் தானென்ன என்பதை தமிழர்களே, நீங்கள் சற்று எடை போட வேண்டும். பாவத் தமிழ்ச் சிறுவர்களை தற்கொலைக் குண்டுகளாக்கி, சிங்கள இராணுவத்தைக் கதிகலங்க அடித்தாலென்ன, சாதாரண சிங்கள மக்களை குண்டுவைத்துப் பிளந்தாலென்ன, இந்தியாவோ அமெரிக்காவோ வேறெந்த நாடோ தமிழ் ஈழம் உருவாகுவதை அனுமதிக்கப் போவதில்லை என்பது கும்பலுக்குத் தெரியும். ஆனால் தமிழ் ஈழத்தை தவிர வேறெந்த தீர்வின் அடிப்படையிலும் இந்தக் கும்பல் தீர்வின் பின் ஆயுதங்களை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைத்திருக்க முடியாது. செய்த கொலைக்கும் - ஒன்று இரண்டா – கொள்ளைக்கும் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு காலம் தள்ளவும் முடியாது. இழக்கக் கூடாததை இழந்தவர் நீதி கேட்பர். இன்னும், இந்திய அரசு நாள்பட்ட ராஜீவ் காந்தி கொலை வழக்கின் பிரதான சூத்திரதாரியான தலைவனை உடனே தீவிரமாக தேடி கைது செய்யும் முயற்சியை ஆரம்பிக்கும். சர்வ தேச பொலிஸும் தன் பங்கைச் செய்யும். தாமாக உருவாக்கிய இந்த நெருக்கடிகளால், இந்தக் கும்பல் பேச்சுவார்த்தை மூலம் பெறக்கூடிய நியாயமான தீர்வை இழுத்தடிக்கவே திட்டம் போட்டுள்ளனர். இதற்கான முஸ்தீபே இந்த இடைக்கால நிர்வாகத் திருவிளையாடல். இடைக்கால நிர்வாகம் என்று கோரி எப்படி தன்காலம் வரையும், ஆயுதபாணியாக இருந்து தன்னையும் தன் நிலைமையையும் காபாந்து பண்ணுவதே மாவீரன் பிரபாகரனின் மகோன்னத இலட்சியம். இவ்வாறு காலம் போக சுவீப் போல தமிழ் ஈழம் கிடைத்து தங்களைக் காப்பாற்றிவிடுமென்ற நப்பாசையைத் தவிர காத்திரமான திட்டமெதுவும் கும்பலுக்கு கிடையாது. நம்பிக்கையும் கிடையாது.

தன் பிள்ளைகளுக்கு நல்ல நிலமைகளை உருவாக்கி கூடத்திரிபவருக்கும் அதை இதைக் கொடுத்து சாந்தப்படுத்தி ஒருவாறாக கும்பலைக் கொண்டிழுத்துப் போவதே தலைவனின் இன்றைய எண்ணம். நீங்கள் யாரும் நினைப்பதுபோல கொள்கை வெறி பிடித்த கும்பலல்ல இது. கொள்கை வெறிபிடித்தவர் என்றால் தலைவனின் சிறு பிள்ளைகளும் மற்றச் சிறுவர்கள் போல போர்முனை சென்றிருப்பர், சயனைட் கட்டியிருப்பர், தற்கொலை குண்டுதாரிகளாயிருப்பர். வேதனை என்னவென்றால் தலைவனின் பிள்ளைகள் சுவீடனில் உங்களதும் எங்களதும் பணத்தில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். மடக்கிப் பிடித்த சின்னப்போடியின் சிறுவன் செத்துக் கொண்டிருக்கிறான். இந்தக் கும்பலின் பித்தலாட்டம் பல. பொன்னாசையும் அதிகார வெறியும் மரண சஞ்சலமும் பிடித்து அலையும் கும்பலிது.

இந்தக் கும்பலின் வெளிநாட்டு முகவர்கள் (உள்வீட்டுப் பிள்ளைகள்) தண்டல் பணத்தைக் கோடி கோடியாகச் சுருட்டி, செல்வபுரிகளிலேயே செல்வந்தர்களாகி விட்டனர். 'தமிழ் ஈழ பூமியிலும்', நிதியோடு அளைந்தவர்கள் பலரும் பத்து பரம்பரைக்குச் சொத்து சேர்த்துவிட்டனர். யுத்தத்துக்கும் காசு, நிறுத்தத்துக்கும் காசு, தொட்டதுக்கும் காசு, பட்டதுக்கும் காசென்று அலைகிறதே இந்தக் கும்பல், காசுக்கும் விடுதலைக்கும் அப்படியென்ன உறவு. இதுதான் நவீன விடுதலையா (neoliberation)? இவர்கள் வாழப் பிறந்தவர்கள். அடிமட்ட போராளிகள், பாவம், அவர்கள் சாகப் பிறந்தவர்கள்.

தமிழ் மக்களை விட்டுத்தள்ளுங்கள், தலைவன் தன் கும்பலுக்குக் கூட ஜனநாயக உரிமைகளை எக்காலத்திலும் அளித்ததில்லை. (மேல்மட்டக் கும்பலுக்கு சலுகைகள் என்னவோ கிடைக்கும். தாராளமாகவும் கிடைக்கும்.) உள் ஜனநாயகத்தை மறுத்ததன் பலனை மக்களே நீங்கள் இன்று கண்கூடாக கண்டுகொண்டிருக்கிறீர்கள். கிழக்கில் சிங்கள குடியேற்றம் காரணமாக, அகண்ட தமிழ் பேசும் பிரதேசத்தை அமைக்க உருவான பரந்த போராட்டத்தை, தலைவன் என்பவன் தனது தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால் அழித்துக்கொண்டே வந்த வரலாற்றின் இன்னொரு அத்தியாயம் இன்று எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. முதலில் தமிழரின், சக போராளிகளின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான போராளிகளும் ஜனநாயகவாதிகளும் படுகொலை செய்யப்பட்டனர். பின்னர் இந்தப் போராட்டத்தில் ஆரம்பத்திலிருந்தே அக்கறை காட்டிய முஸ்லிம் மக்களை வெளியே தள்ளி, உள ரீதியாகவும் சமூக ரீதியாகவும் தமிழ் மக்களிடமிருந்து பிரித்து, போராட்டத்தின் அரசியல், பிரதேசப் பிரச்சினைகள் இனிமேல் இல்லையென்ற அளவுக்கு சிக்கலாக்கப்பட்டன. இன்று தமிழ் மக்களின் முதுகெலும்பான பிரதேசத்தையே, பிரதேச வாதத்தில் மூழ்க வைத்து விட்டார்கள் இந்தத் தலைவனும் கும்பலும். எதற்கும் சந்தேகம், சதி, கொலை, கும்பலை எங்கே விட்டிருக்கிறது என்பதல்ல பிரச்சினை. எங்களை எங்கே விட்டிருக்கிறது என்பதே எமது பிரச்சினை.

இந்தச் சதிகாரர்கள் தட்டிக்கேட்பவர்களை தமிழ் ஈழ துரோகி என்று நாமஞ் சூட்டி கொலை செய்து விடுகிறார்கள். நாமோ வாயை பூட்டால் பூட்டி ஒன்றுமே நடக்காதது போல் திரிகிறோம். இதற்கென்ன பரிகாரம்.

இன்று தேர்தலுக்கு ஆமாஞ் சாமிகளையும் ஐயோ சாமிகளையும் பட்டியலில் போட்டு உங்கள் முன் விட்டிருக்கிறார்கள். யாருக்கு உங்கள் வாக்கு? இவர்களது மிரட்டல்களுக்கு அஞ்சாது தன்மானமுள்ள தமிழர்கள் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் வன்னியிலும் வேறு வேறு குழுக்களாக உங்கள் முன்னிலையில் நிற்கிறார்கள். இந்த மாற்றுக் குழுக்களிடையே அநியாயக்காரர் இல்லாமலில்லை. ஆனால் இந்த புலிகள் கும்பல் அநியாயத்தின் உச்சியில் நின்று ஆடுகிறது. மற்றவர்கள் அடிவாரத்திலேயே நிற்கிறார்கள்.

எனவே தமிழ் தேசிய முன்னணி தவிர்ந்த ஏனையோரில், நீங்கள் விரும்புவருக்கு உங்கள் பொன்னான வாக்கை அளித்து, உங்கள் எதிர்காலம் பற்றி நீங்களும் சிந்திக்கிறீர்கள் என்பதை இந்த உலகுக்கு எடுத்துக்காட்டுங்கள்.

**உலகத் தமிழர்கள்**

(மற்றவர்களையும் இதை வாசிக்கச் செய்யுங்கள்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்